**அ.வ.எண்: 79/2010** **நாள்: 25.07.2025**

வா.சா.4 - கார்த்திக்கேயன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>2 முதல் 6 மற்றும் 8 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. வாதி தரப்பு ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் தாவா வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 2ம் இலக்கச் சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 2ம் இலக்கச் சொத்திற்கான நான்குமால் சரியானது தான். மேற்படி நான்குமாலின் படி வடக்கே கருப்பாயி நாச்சியார் புஞ்சை என்றால் சரிதான். தாவா பிராதில் தாவா சொத்திற்கான நான்குமாலில் வடக்கே சுப்புராயன் அம்பலம் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம், தாவா சொத்திற்கான நான்குமாலானது 1926ம் ஆண்டின் ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டது. அதனால் தாவா பிராதில் நான்குமாலானது 1926ம் ஆண்டின் ஆவணத்தின் அடிப்படையில் தான் உள்ளது என்றால் சரிதான். தற்பொழுது உள்ள நான்குமால் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், அது அவர்களின் வாரிசு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. நான் தாவா பிராதில் நான்குமாலானது 1926ம் ஆண்டின் ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளது என்றும், தற்போது நான்குமாலானது அவர்களின் வாரிசு அடிப்படையில் உள்ளது என்றும், அதற்கான விளக்கத்தை தாவா பிராதில் கூறவில்லை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.30 ஆவணத்தில் 9 இலக்கச் சொத்து தான் தாவாச் சொத்தானது என்றால் சரிதான். மேற்படி 9 இலக்கச் சொத்தின் நான்குமால் சரியானது தான். மேற்படி வா.சா.ஆ.30 ஆவணத்தில் தாவாச் சொத்திற்கு கிழக்கே முத்துராமலிங்கம் புஞ்சையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுடுகாடு எங்கு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்திற்கு மேற்கே காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு தெற்கே பெரியநாயகி நாத்தங்கால் காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு வடக்கே குப்புசாமி வகையறா புஞ்சை மற்றும் சிதம்பரம் சுப்பிரமணியன் தோப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

3. தாவா பிராதில் காட்டப்பட்டுள்ள நான்குமால், 1926ம் ஆண்டின் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள நான்குமால், வா.சா.ஆ.30த்தில் காட்டப்பட்டுள்ளது நான்குமால் எது சரி என்றால் அனைத்தும் சரிதான். நான் கிரையம் பெற்றுள்ள கிரைய ஆவணமான வா.சா.ஆ.5 ஆவணத்திலும், பிராதிலும் மேற்கு பக்க நான்குமாலாக சுடுகாடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றும், விஸ்தீரணம் குறுக்கம் அளவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு பக்க நான்குமால் எப்படி சுடுகாடாக மாறியது என்பது குறித்த விளக்கத்தை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. வாசாஆ3. ஆவணமான எனது தகப்பனார் கொடுத்த அறிவிப்பில் கிரைய ஆவணத்தை பற்றியோ உயில் சாசனத்தை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் சர்வே எண் நான்குமால் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை அனுப்பும் பொழுது எனது தகப்பனாருக்கு வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தை பற்றி தெரிந்து இருந்தும் அறிவிப்பில் ஏன் கிரைய பத்திரத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளது. (சாட்சியிடம் வா.சா.ஆ.3 காட்டப்பட்டது, அதனை படித்து பார்த்துவிட்டு குறிப்பிடப்படவில்லை என்று கூறினார்). வா.சா.ஆ.5 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லாத காரணத்தினால் தான் மேற்படி அறிவிப்பில் வா.சா.ஆ.5 பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால், அறிவிப்பில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. காளியம்மாள் என்பவருக்கு பனசமக்கோட்டையில் வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு காளியம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் பட்டா இல்லை. எனது தகப்பனார் நல்ல விவரம் தெரிந்தவர் தான், வருவாய்த்துறை ஆவணங்கள் பற்றியும், பட்டாக்கள் பற்றியும் தெரியும். தவறுதலாக பட்டா ஏற்பட்டதை சரி செய்ய எனது தகப்பனார் ஏதேனும் முயற்சி எடுத்தாரா என்றால் எடுத்தார், மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு தாக்கல் செய்தார், அதில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளும் படி உத்தரவிடப்பட்டது. மேற்படி மனுவின் நகலும், உத்தரவின் நகலும் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது, அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி நடவடிக்கை தாவாச் சொத்திற்கும் சம்மந்தப்பட்டது தான். மேற்படி மனுவில்

வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மேற்படி மனுவையும், உத்தரவையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அதில் வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி குறிப்பிடவில்லை என்ற விவரம் தெரிந்து விடும் என்பதால் தான், அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணமானது சான்றிட்ட நகல் என்றால் சரிதான். நான் அசலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அதிலுள்ள மீனாட்சியும், எனது மூப்பாட்டியார் மீனாட்சியும் வேறு நபர் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 23.02.2024ம் தேதிய வா.சா.ஆ.6 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6-ன் அசல் ஆவணமானது யாரிடம் உள்ளது என்றால் 6ம் பிரதிவாதி மீனாளின் கணவர் மணி என்பவரிடம் உள்ளது. மேற்படி ஆவணங்களும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லாததால் தான் அவற்றின் அசல் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தில் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 5 இலக்கச் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. (சாட்சியிடம் வா.சா.ஆ.7 ஆவணம் காட்டப்பட்டது) வா.சா.ஆ.7 ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு அதில் தாவாச் சொத்து குறிப்பிடப்படவில்லை என்று தற்போது கூறுகிறார்.

7. வா.சா.ஆ.8 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் 1ம் வாதியின் தாயார் மீனாட்சியம்மாளுக்கு என்ன என்ன சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஏற்பட்ட காலத்தில் மேற்படி மீனாட்சியம்மாள் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கான அனைத்து ஆவணங்கள் அவரிடம் தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் எந்த எந்த சொத்துக்கள் எந்த எந்த தேதியில் கிரையம் பெற்றது தொடர்பான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ8 ஆவணத்தில் சொத்துக்களின் நான்குமால், சர்வே எண் குறிப்பிட்டு தனித்தனியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தை பற்றி எனது தகப்பனார் அனுப்பிய அறிவிப்பிலோ பிராதிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தின் அசல் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.8 கண்டுள்ள மீனாட்சியும், 1ம் வாதியின் தாயாரான மீனாட்சியம்மாளும் வேறு நபர் என்பதால் தான் வா.சா.ஆ.8 அசல்

என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ9 ஆவணம் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டதா என்றால் சம்மந்தப்பட்ட ஆவணம் தான். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தை சிதம்பரம் மகன் பெரியசாமிசேர்வை என்பவர் கல்லிக்குடி பெரியண்ண அம்பலம் ஆகிய பெரியசாமி அம்பலம் என்பவருக்கு எழுதிக் கொடுத்தார். மேற்படி சிதம்பரம் மகன் பெரியசாமிசேர்வைக்கும் மீனாட்சிக்கும் என்ன உறவு என்றால் அவருடைய சிறிய தாயார் தான் மீனாட்சியம்மாள். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தை பொறுத்து எந்த பரிகாரமும் எனது பிராதில் கேட்கவில்லை என்றால் சரிதான்.

9. மேற்படி வா.சா.ஆ.9 ஆவணம் ஏற்பட்ட காலக்கட்டத்தில் அதை எழுதிக் கொடுத்த சிதம்பரம் மகன் பெரியசாமிசேர்வை என்பவருக்கும் அவருடைய சிறிய தாயாரும் உறவு நிலை எப்படியிருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தில் 5ம் இலக்கச் சொத்தாக தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமால் சரிதான், சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் கல்லிக்குடி பெரியண்ண அம்பலம் ஆகிய பெரியசாமி அம்பலம் என்பவர் சிதம்பரம் மகன் பெரியசாமிசேர்வை என்பவருக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் தாவாச் சொத்து கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தின் அடிப்படையில் தான் பெரியசாமி சேர்வையின் வாரிசுகள் தாவா சொத்தில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணத்தை பற்றி தாவா பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் செல்லாது என்ற பரிகாரத்தை தாவா பிராதில் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆகிய ஆவணங்கள் முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.11யில் அனைத்து சொத்துக்களும் மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் சர்வே எண் 59/6பி ல் 4 ஏக்கர் 61 செண்ட் விஸ்தீரணத்தில் 1 ஏக்கர் 35 செண்ட் மட்டுமே மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது. ஆனால் வா.சா.ஆ.11 ஆவணத்தில் சர்வே எண் 59/6 பி முழுவதற்கும் சிதம்பரம் வகையறா பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறுதலாக பதிவு ஏற்பட்டுள்ளது. இந்த தவறை எனது தகப்பனார் தான் முதலில் கண்டு அறிந்தார். இதன் தொடர்பாகவும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. மேற்படி சர்வே எண் 59/6 பியில் எந்த பக்கம் மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணம் எண் 1453/1926 உள்ளது. தாவா பிராதிலும் மேற்படி மொத்த சொத்தான சர்வே எண் 59/6பி யில் எந்த பக்கம் மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும் எந்த ஆவணத்தின் அடிப்படையில் அது பாத்தியப்பட்டள்ளது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமாலானது மொத்த சொத்திற்கான நான்குமால் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வம்சாவழி ஜாபிதாவில் உள்ள சிலர் இறந்தது குறித்தோ அவர்களின் இறப்பு சான்றிதழ்கள் அவர்களின் வம்சாவழி குறித்தோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். (சாட்சி தற்பொழுது தாவா பிராதில் உள்ள நான்குமால் மீனாட்சியாம்மாளுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 35 செண்டிற்கான நான்குமால் தான் என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறார்). வா.சா.ஆ5 ஆவணத்திலுள்ள நான்குமாலும் மீனாட்சியாம்மாளுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 35 செண்டிற்கான நான்குமால் மட்டுமே ஆகும்.

12. தாவா சொத்தானது வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் மட்டுமே வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.8 மூலம் பாத்தியப்பட்டது ஆகும். வா.சா.ஆ.13 ஆவணத்தில் தாவா சொத்து கட்டுப்பட்டுள்ளதா என்றால் கட்டுப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் வா.சா.ஆ.13 ஆவணம் தெளிவு நகலில் 8 இலக்கத்தில் சர்வே எண் 59/6 பி என்று பேனாவில் குறிப்பிட்டுள்ளது தவறு, 11 ம் இலக்க சொத்து தான் தாவா சொத்து ஆகும். வா.சா.ஆ.13 ஆவணம் மீனாட்சியம்மாள் கிரையம் பெற்ற ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்தானது தாவா சொத்தான சர்வே எண் 59/6பி க்கு எந்த பக்கம் உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்கு எல்லையில் மீனாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, மீனாட்சியின் கணவரான சிதம்பரத்தின் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13-ல் 11வது இலக்கச் சொத்தில் சர்வே எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 கண்ட சொத்துக்களுக்கு மீனாட்சியம்மாளின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை, கூட்டு பட்டாவாக தான் உள்ளது.

13. வா.சா.ஆ.5 ஆவணத்தை சுப்பையா சீதை என்பவர் மீனாட்சிக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் குருந்தப்பன்

என்று யாரும் சம்மந்தபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் 11 வது இலக்கத்தில் கிழக்கு பக்கமாக சிதம்பரம் சேர்வை புஞ்சை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(2 முதல் 6, 8 முதல் 15 ஆகிய பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**